**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-1/2024**

**List of Witness LW7 Examined as PW7**

| | | | |
|---|---|---|---|
| Name | தியாகராஜன் | Age: | 46 |
| Father's name | பிச்சை | Calling: | சமையல் மாஸ்டர் |
| Village | மேலகுமரேசபுரம் | Taluk | திருவெறும்பூர் |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 26.12.2025
(எதிரிகள் ஆஜர். )

முதல் விசாரணை

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து சமையல் மாஸ்டராக வேலை செய்து வருகிறேன். கடந்த 11.05.2019 ஆம் தேதி காலை சுமார் 5.30 மணியளவில் மேலகுமரேசபுரம் இரயில்வே கேட் அருகில் நான் வாக்கிங் சென்று கொண்டிருந்தேன். அப்போது அங்கு காவல் ஆய்வாளர் மற்றும் கிருஷ்ணசமுத்திரம் கிராம நிர்வாக அலுவலர் அங்கு இருந்தார்கள். என்னை அழைத்து கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள சாட்சி கையொப்பங்கள் மற்றும் முறையே அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்ற கேள்வி**

போலீசார் விசாரணையில் கடந்த 11.05.2019 ஆம் தேதியன்று, நான் கீழ குமரேசபுரம், இரயில்வே கேட் அருகில், சென்ற போது, அங்கு TN 18 J 1029 என்ற பதிவெண் கொண்ட சிவப்பு நிற டபேரா கார் அங்கு நின்று கொண்டிருந்தாகவும் காவல் ஆய்வாளர் அங்கு 3 நபர்களை விசாரித்துக்கொண்டிருந்தார் என்றும் அந்த நபர்களின் பெயர் செல்வகார்த்திக், ஆனந்தன், தமிழ்செல்வன் என்று சொன்னார்கள் என்றும் அப்போது, செல்வக்கார்த்திக் போலிசாரிடம் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தினை போலிசார் எழுதிக்கொண்டார்கள் என்றும் அதில் செல்வக்கார்த்திக் திருவையாறை சேர்ந்தவர் என்றும் சம்பவங்களை பற்றி சொன்னார் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் நான் சாட்சி

கையொப்பம் செய்தேன் என்றும் அந்த இடத்தில், போலிசார் ரூ.500/- பணம், 3 கத்திகள், மேற்படி காரினை கைப்பற்றினார்கள் என்றும்

2) மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில், செல்வக்கார்த்திக் பொருள்களை காண்பிப்பதாக சொன்னதன் பேரில், திருவெறும்பூரில் உள்ள LIC பில்டிங் அருகில் உள்ள VV கார் ஒர்க் ஷாப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குவாலிஷ் காரில் இருந்து, வெள்ளியிலான நான்கு கழுத்து செயின், 2 மோதிரம், 12 கைசெயின், 6 செல்போன்கள் ஆகிவற்றை செல்வக்கார்த்திக் எடுத்து ஆஜர் செய்து, போலிசார் கைப்பற்றினார்கள் என்றும் அதில் என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள் என்றும் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சொன்னேனா என்றால் இல்லை.

எதிரி குறுக்கு விசாரணை இல்லை.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

**ஒப்பம்.என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**